1982 பிப்ரவரி 16]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது துறை கவனித்து வருகிறது என்று சொன்னார்கள். குறிப்பாகச் சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும் அதிகமான தென்னை மரங்கள் நோயினால் அழிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? துறை எந்தெந்த இடங்களைக் கவனித்து வருகிறது என்பதைத் தெரிவிப்பதோடு, இப்படி நோயினால் தென்ன மரங்கள் அழிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு முன் வந்ததா? அப்படி எவ்வளவு உதவி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வி, மாநிலத்தில் தென்னை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது என்பது பற்றியது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நோயைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. பொ. உக்கிரபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையில் பட்டா வழங்கும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருந்தது. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு தென்னம் பிள்ளையாவது கொடுத்துப் பரவலாகத் தென்னை உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தென்னை உற்பத்தியை எவ்வளவு அதிகரிக்கச் செய்ய வேண்டுமோ அந்த வகையில் அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற கருத்துப்படி அரசுக்கு விருப்பம் இருக்கக் கூடும். இருந்தாலும் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் நாம் இதை முடிவு செய்ய முடியும்.

கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

* வினா எண் 190.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பசுமைப்புரட்சித் திட்டத்தின்கீழ் கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : * ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 125ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

[1982 பிப்ரவரி 16

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு அவர்கள் பூசணிக்காய் அளவிற்குத் தக்காளி, கத்தரிக்காயெல்லாம் உற்பத்தி செய்து கண்காட்சியில் வைத்தார்கள். அதுபோலப் பூசணிக்காய் அளவிற்கு இல்லா விட்டாலும் வேர்க்கடலை பருமனுக்காவது நெல் உற்பத்தி யினைக் கோவை விவசாயப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரிசியைப் பொறுத்த அளவிலே நாம் விரும்பி உண்ணுகின்ற உணவு அது. அதிலே நாம் கண்காட்சி வைக்கின்ற அளவிற்கு ஆராய்ச்சி செய்ய முடியாது. எந்த அளவிற்குத் தேவையோ அந்த வகையிலே நாம் உற்பத்தியைப் பெருக்குகின்ற ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கிறோம். 1981-82—ல் நம்முடைய உற்பத்திக் குறியீடாக 65 இலட்சம் மெட்ரிக் டன்கள் இருக்கின்றன. ஆகவே, எந்த வகையில் தேவையோ அந்த அளவிற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் மேற்கொண்டுள்ள டி. என். ஏ. ஆராய்ச்சி மூலம் கிரீன் ரெவல்யூஷன் செய்ய முடியும் என்றும், பத்து அடி, பதினைந்து அடி உயரமுள்ள இராட்சச மனிதர்களையே உருவாக்க முடியும் என்று கூறி ஞாயிற்றுக்கிழமை இந்து பத்திரிகையில் பிரபல நியூரோ சர்ஜன் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் இதே கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இராட்சச மனிதர்களையே உற்பத்தி செய்தால் இப்பொழுதுள்ள சிறிய நெல்மணி போதுமா? அதற்காகவாவது பெரிய அளவில் நெல் உற்பத்தியைச் செய்ய அரசு ஆராய்ச்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழங்கியிருக்கின்ற ஆராய்ச்சிக் கருத்துக்களுக்கு அரசின் சார்பாக நன்றியைக் கூறி, அதையும் நம்முடைய வேளாண்மை ஆராய்ச்சித் துறை நிச்சயமாக ஏற்று, எந்தவகையில் பரிசீலிக்க வேண்டுமோ அந்த வகையில் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நெல்லின் உற்பத்தியை அதிகரிக்க இங்கே அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையில் உயர் விளைச்சல் ரகங்களையெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். பிரதான மாக இந்த விளைச்சல் கூடாததற்கான காரணம் பெரும்பகுதி யாக உள்ள சின்னச் சின்ன விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காததால் விளைச்சல் உயர்வதற்குத் தடங்கலாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து நியாய விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அமைச்சர் உணர்கிறார். உணர வேண்டியவர்கள் உணர வில்லையே என்பதுதான் இப்பொழுதுள்ள நிலைமை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப்பொன்னி என்கின்ற புதுரக நெல் இப்போதிருப்பதைவிட 50 சதவீதம் கூடுதல் மகசூல் கொடுக்கிறது என்றும் அதைப் போய் நோய்களே தாக்கவில்லை யென்றும் ஆனால், அதனுடைய அடிப்படை வித்துக்கள் தமிழகத்திலே விநியோகிக்கப்படவில்லை, சிங்கப்பூர் பகுதியிலே யிருந்து கடத்திக் கொண்டு திருச்சிப் பகுதியிலே போடுகிறார்கள் என்றும் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வெள்ளைப் பொன்னி என்ற அதிக மகசூல் கொடுக்கின்ற நெல்லை தமிழக விவசாயத் துறையில் புகுத்தி, விவசாயிகளுக்கு வழங்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதுபற்றி தகவல் இல்லை. இருந்தாலும் பயன்படக்கூடிய நெல் ரகம் எதுவாக இருந்தாலும் அதை ஆராய்ச்சித் துறை ஏற்று, நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில்தான் பாசன வசதி உள்ளது. மூன்றில் இரண்டு பகுதி வானம் பார்த்த பிரதேசம். குறைந்த தண்ணீர் வசதியோடு உற்பத்தி செய்யக்கூடிய நெல் வகைகள் ஆராய்ச்சியிலிருந்ததே, அது முழுமையாக இன்று வெற்றி அடைந்து விதைக்குத் தகுந்த அளவுக்கு வந்து விட்டதா? இந்த அரசு கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஓரளவுக்கு அதிலே வெற்றி கிடைத்திருக்கிறது. முகவை மாவட்டம் போன்ற பகுதிகளில் புழுதி நெல் என்ற நெல் ஓரளவு நன்றாக உற்பத்தியாகி வந்திருக்கிறது. ஆகவே, அரசு அதிலே கவனம் செலுத்துகிறது.

மருங்காபுரி தொகுதியிலுள்ள அரசு சாலைகளைப் பராமரிக்கும் பணி.

*வினா எண் 191—திரு. மே. அ. இராஜ்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி தொகுதியில் உள்ள மிகவும் பழுதுபட்டுள்ள P.W.D. ரோடுகளை சரி செய்ய அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?